II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 143 of 2023**

Deposition of witness for the 2nd Petitioner / PW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant.
in accordance with the provision of Act I for 1873 on 12/08.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : Prakash | Caste | : |
| Father's / Husband's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

முதல் விசாரணை=

நான் வழக்கின் 2ம் மனுதாரர். ஏற்கனவே எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை ம.சா.ஆ.1 முதல் 19 வரை குறியீடு செய்ய வேண்டுகின்றேன்.

1. முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் ம.சா.ஆ.1

2. இறப்பு அறிக்கையின் நகல் ம.சா.ஆ.2

3. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு நகல் ம.சா.ஆ.3

4. இறப்பு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.4.

5. பிரேத பரிசோதனை நகல் ம.சா.ஆ.5.

6. வாரிசு சான்றிதழின் நகல் ம.சா.ஆ6.

7. 1ம் எதிர்மனுதாரரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் உண்மை நகல் ம.சா.ஆ.7.

8. போலிசாரின் மாதிரி வரைபடம் ம.சா.ஆ.8

9. இறுதி அறிக்கையின் உண்மை நகல் ம.சா.ஆ.9

10. 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் R.C.Book ன் உண்மை நகல் ம.சா.ஆ.10.

11. 1ம் மனுதாரரின் ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ.11.

12. 1ம் மனுதாரரின் பான்கார்டின் நகல் ம.சா.ஆ.12.

13. 1ம் மனுதாரரின் வங்கி இருப்பு கையேட்டின் நகல் ம.சா.ஆ.13.

14. 2ம் மனுதாரரின் ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ.14.

15. 2ம் மனுதாரரின் பான்கார்டின் நகல் ம.சா.ஆ.15.

16. 2ம் மனுதாரரின் வங்கி இருப்பு கையேட்டின் நகல் ம.சா.ஆ.16.

17. 3ம் மனுதாரரின் ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ.17.

18. 3ம் மனுதாரரின் பான்கார்டின் நகல் ம.சா.ஆ.18.

19. 3ம் மனுதாரரின் வங்கி இருப்பு கையேட்டின் நகல் ம.சா.ஆ.19.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை=

விபத்து தொடர்பாக காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. எனது நண்பர் ராஜேந்திரன் தகவல் சொன்னதன் பேரில் சம்பவம் பற்றி தெரியும். முதல் தகவல் அறிக்கையில் என் அப்பா சாலையை நடந்து கடந்த போது விபத்து நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் வேண்டுமென்றே கடந்த போது என்ற வார்த்தையை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் என் தந்தைக்கு 76 வயது என்றால் சரிதான். என் அப்பா வயது முதிர்வின் காரணமாக கவக்குறைவாக சாலையை கடந்தது விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இரு சக்கர வாகன ஓட்டுனருக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் பழகுனர் உரிமம் மட்டுமே இருந்தது என்றாலும் எனக்குத் தெரியாது. அவரது பின்னால் பயிற்சியாளர் இல்லை என்றால் எனக்குத் தெரியாது. காப்பீடு விதி மீறல் உள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் எனக்கு இழப்பீடு ஏதேனும் கிடைத்தால் 1ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்கவேண்டும் என்றாலும் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.